# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்

முன்னிலை : **திரு.P.பிரவீன் ஜீவா, பி.ஏ.,பி.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.13/2026** – (Re-open)

**இ.ம.எண். 14/2026** – (Recall – Order 18 Rule 17)

**உள்**

**அசல் வழக்கு எண்**.261/2015
(CNR No.TNTL0D-000347-2015)

1. சரோஜா (இறப்பு)
2. சதீஸ்சங்கர்
3. வினோத்குமாரி ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. இசக்கி
2. ரேவதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது கடந்த 22.6.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சிவராமகிருஷ்ணன்** அவர்கள் ஆஜராகியும், **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முத்துராமலிங்கம்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இம்மனுவில் இன்று 29.6.2026 ம் தேதி இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொதுவான உத்தரவு

### இ.ம.எண்.13/2026

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யும்பொருட்டு பி.வா.சா.3 ன் சாட்சியத்தை மறுதிறப்பு செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கக் கோரி உ.வி.ந.மு.ச பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இ.ம.எண்.14/2026</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்பொருட்டு பி.வா.சா.3 ஐ மீண்டும் அழைக்கக்கோரி உ.வி.ந.மு.ச கட்டளை 18, விதி 17–ன் கீழ் மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுக்களின் சுருக்கம்</u> :–**

அசல் வழக்கானது பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 6.3.2026 ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் 2 ம் மனுதாரருக்கு குழந்தை பிறந்து அவருடைய மனைவிக்கு மருத்துவ சிகிச்சையில் இருந்த காரணத்தினால் குறுக்கு விசாரணை குறித்து தனது வழக்கறிஞருக்கு தகவல் கொடுக்க இயலாமல் போய்விட்டது. அதனால், பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் சாட்சியமானது முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி விபரம் தற்போது தான் வழக்கறிஞரை நேரில் கேட்டபோது தான் தெரியவந்தது. மேற்படி பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே, பி.வா.சா.3 ன் சாட்சியத்தை மறுதிறப்பு செய்தும், பி.வா.சா.3 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணையை செய்ய ரீ–கால் செய்தும் உத்தரவிட வேண்டி இந்த இரண்டு இடைக்கால மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>1 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்</u> :–**

மனுதாரரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை. 2 ம் மனுதாரர் சமீப காலமாக நீதிமன்றத்திற்கு வந்தது இல்லை. பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை குறித்து 2 ம் மனுதாரர் அவரது வழக்கறிஞரிடம் தகவல் கொடுக்க

இயலாமல் போய்விட்டது என்பது சரியல்ல. மேற்படி பொய்யான காரணங்களைக் கூறி இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனுக்களை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இந்த இரண்டு இடைக்கால மனுக்களிலும் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அசல் வழக்கில் பி.வா.சா.3 ன் சாட்சியத்தை மறுதிறப்பு செய்தும், பி.வா.சா.3 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியமா? இல்லையா? என்பதே ஆகும்.

__தீர்வு__ :–

5. இந்த இரண்டு இடைக்கால மனுக்களிலும் இருதரப்பு விவாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

6. இந்த இரண்டு இடைக்கால மனுக்களின் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் யாதொரு வாய்மொழி சாட்சியமோ ஆவண சாட்சியமோ முன்னிடப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் மனு மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளின்படியே வாதிட்டனர்.

7. இந்நீதிமன்றமானது அசல் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டபோது, அசல் வழக்கானது, பிராது தபசில் சொத்துதைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் அடிப்படையில், கடந்த 10.10.2020 ம் தேதியில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1, பி.வா.சா.2 சாட்சியம் முடிக்கப்பட்டு, பி.வா.சா.3 ன் குறுக்கு விசாரணைக்காக கடந்த 7.10.2025, 22.10.2025, 30.10.2025, 6.11.2025, 13.11.2025, 19.11.2025, 5.12.2025, 7.1.2026, 4.2.2026, 6.3.2026 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யப்படாததால் கடந்த 13.3.2026 ம் தேதியன்று பி.வா.சா.3 ன் சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இந்த இரண்டு இடைக்கால மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**8.** இந்நீதிமன்றமானது வழக்கு ஆவணங்கள், மனு அபிடவிட் மற்றும் எதிருரை சங்கதிகளை பார்வையிடும்போது வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 6.3.2026 ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் 2 ம் மனுதாரருக்கு குழந்தை பிறந்து அவருடைய மனைவிக்கு மருத்துவ சிகிச்சையில் இருந்த காரணத்தினால் குறுக்கு விசாரணை குறித்து தனது வழக்கறிஞருக்கு தகவல் கொடுக்க இயலாமல் போய்விட்டது என்றும், அதனால், பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் சாட்சியமானது முடிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி பி.வா.சா.3 ஐ குறுக்குவிசாரணை செய்ய அசல் வழக்கில் பி.வா.சா.3 ன் சாட்சியத்தை மறுதிறப்பு செய்தும், பி.வா.சா.3 ஐ மீண்டும் அழைக்கக்கோரியும் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

9. மேற்படி அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1, பி.வா.சா.2 சாட்சியம் முடிக்கப்பட்டு, பி.வா.சா.3 ன் குறுக்கு விசாரணைக்காக கடந்த 7.10.2025, 22.10.2025, 30.10.2025, 6.11.2025, 13.11.2025, 19.11.2025, 5.12.2025, 7.1.2026, 4.2.2026, 6.3.2026 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதிகளில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் நாள் கடத்தி தற்போது இம்மனுவில் கூறப்பட்டுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமையவில்லை. இருப்பினும், மேற்படி அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர தடையுறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையிலும், மனுதாரர்/பிரதிவாதியின் எதிர்வாத வழக்கை நிரூபணம் செய்யும் வகையிலும், இந்த வழக்கில் ஒருமித்த தீர்வு ஏற்படும் வகையிலும் மேற்படி அசல் வழக்கில் பி.வா.சா.3 சாட்சியை முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டியது அவசியம் ஆகும். எனவே, வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மனுதாரர்கள்/வாதிகளுக்கு அவரது வழக்கை நிரூபணம் செய்யும் வகையில் மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு, மேற்படி பி.வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய அசல் வழக்கில் பி.வா.சா.3 ன் சாட்சியத்தை மறுத்திறுப்பு செய்து பி.வா.சா.3 ஐ மீண்டும் அழைக்க உத்தரவிட வேண்டியது அவசியமானது என்பதால் இம்மனுக்களை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**10.** அதேவேளையில், அசல் வழக்கில் பி.வா.சா.3 ன் முதல் விசாரணை முடிக்கப்பட்டு, குறுக்குவிசாரணைக்காக பல வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இந்த இரண்டு இடைக்கால மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் மூலம் அசல் வழக்கின் விசாரணைக்கு ஏற்பட்டுள்ள காலதாமதம் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்பட்டுள்ள காலவிரயம் மற்றும் அசௌகரியத்தை கருத்தில் கொண்டு உரிய செலவுத்தொகை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு, மனுதாரர்கள்/வாதிகளால் வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக,** மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு இந்த இரண்டு மனுக்களுக்கும் தலா ரூ.500/- வீதம் ஆக மொத்தம் ரூ.1000/-யை வரும் 8.7.2026-ஆம் தேதிக்குள் செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில், இம்மனுக்கள் அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில், இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும் பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மீண்டும் அழைக்க 9.7.2026.

இந்த பொதுவான உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRAVEENJEEVA P

Uploaded on 30.06.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.06.30 17:21:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> :- இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> :- இல்லை

PRAVEENJEEVA P

Uploaded on 30.06.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.06.30 17:21:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

-----------------------------

மு.மா.உ.நீதிமன்றம், அம்பை

இ.ம.எண்கள்.13/2026, 14/2026

இன்

அ.வ.எண்.261/2015

**பொதுவான உத்தரவு** (நேரிய/வரைவு)

நாள் : 29.6.2026

-----------------------------